# திருமலைத்தீபம்

## Thirumalaitheepam

சுடர் 11
விலை 20/=

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

மார்கழி இதழ்~2014 ,ஆரம்பம் 15மாசி~2013. திருமறைக்கல்வி நடுநிலையம், இல:297 டொக்கியாட்வீதி, திருகோணமலை. தீபம்~11



E-mail- catetcota@gmail.com

T.P- 026 2221022, 0263202532


**காத்திருப்பதும் எதிர்ப்பார்த்திருப்பதும் அன்பின் அடையாளம்**

*Merry christmas and a Happy New year 2015*

## மறைமாவட்ட ஆயரின் நத்தார் செய்தி



மீண்டும் நமக்கு மாபெரும் மன்னராம் இயேசு மாட்டுத் தொழுவத்தில் பிறக்கவும் - நள்ளிரவில் **"விணிணிலிருந்து வானதூதர்கள் விண்ணில் இறைவனுக்கு மகிமை மண்ணில் நல் மனம் கொண்ட மனிதர்க்கு அமைதி"** என்ற மாபெரும் நற்செய்தியை பாடவும் பாமர இடையர்கள் அத் தெய்வீக குழந்தையை பார்த்து வணங்க தேடிவந்த நிகழ்வையும் தொடர்ந்தும் கேட்டு, அறிந்து, சிந்தித்து நாமும் அந்நிகழ்வுகளுடன் எம்மையும் சேர்த்துக் கொள்கின்றோம்.

கார்த்திகை 30ம் திகதி புதிய வழிபாட்டு ஆண்டு ஆரம்பிக்கின்றது. கிறிஸ்துவின் திருவருகைக்கு எம்மை தயார் செய்யும் காலம் விடிகிறது. அது திரு வருகைக்காலத்தின் 1ம் ஞாயிறு தொடர்ந்து நான்கு ஞாயிறு வாரங்கள் ஆயத்தம் செய்யவுள்ளோம். இறுதியாக மார்கழி 25ம் திகதி கிறிஸ்து இயேசுவின் பிறப்பின் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம்.

கிறிஸ்து பிறப்பு விழா மாபெரும் மறை உண்மையை அதாவது எமது மீட்பின் நற்செய்தியை எமக்கு உணர்த்துகின்றது. கடவுள் மனிதனானார், கடவுள் குழந்தையானார், கடவுள் ஏழையானார் மனிதனைத் தெய்வமாக்க தெய்வம் மனிதரானது. மனிதர் இறைத் தன்மையில் பங்குபெற்றுள்ளனர்.

மேலும் இவ்வழிபாட்டு ஆண்டின் ஆரம்பத் தினத்தில் அதாவது 30ம் திகதி ஞாயிறு தினத்திலிருந்து **அர்ப்பண வாழ்வின்** ஆண்டாக நாம் அனுசரிக்க அழைக்கப்படுகின்றோம்.

அதாவது துறவற வாழ்வின் மாண்பையும் பணியையும் சான்று பகரும் வாழ்வையும் பற்றி ஆழமாக சிந்திக்க ஒரு வருடகால அவகாச சந்தர்ப்பத்தை திருத்தந்தை பிரான்சிஸ் எமக்கு அளித்துள்ளார். துறவற வாழ்வில் இறைவனோடு நெருங்கி வாழும் மகிழ்ச்சியை பிறரும் அறிந்து அவ்வாழ்விற்கு அர்ப்பணிக்கக் கூடிய இளைஞர் யுவதிகள் துணிச்சலோடு அவ்வாழ்வைத் தழுவ முன்வர வேண்டும் எனவும் திருத்தந்தை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எமது நாட்டில் அரசியல் குழப்பங்கள், வன்முறைகள், புதியயுகம், படைக்கவென தோன்றியுள்ளன. இவை கொண்டுள்ள இலக்கை நேர்மையான முறையில் வென்றெடுக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



இதற்கிடையே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களது வருகை தை மாதம் 13, 14, 15ம் திகதிகளில் நடைபெற இருப்பதும் கத்தோலிக்க மக்களுக்கு மாத்திரமல்ல எமது நாட்டின் அனைத்து மக்களுக்கும் இறையாசீரைப் பெற்றுத்தர வேண்டும் என இறைவனை வேண்டுவோம்.

## வெள்ளிவிழா நிகழ்வு



**தூயமரியாள் பேராலயத்தில் 19.10.2014 அன்று குருமுதல்வரும் பேராலய பங்குத்தந்தையுமான அருட்பணி தே. கிங்ஸ்லி றொபட் தலைமையில் அருட்பணி ஜோர்ஜ் திசநாயக்காவின் வெள்ளிவிழா நிகழ்வு கொண்டாடப்பட்டது.**

## கிறீஸ்து அரசர் பெருவிழா கன்னியா

**அதி.வந் ஆயர் ஜோசப்கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு சிறுவர்களுக்கு முதன்நன்மை, உறுதிபூசுதல் ஆகிய அருட்சாதனங்கள் வழங்கப்பட்டன.**



## இறந்தோரை நினைவு கூரும் கார்த்திகை 2

கார்த்திகை இரண்டு எவராலும் மறந்துவிட முடியாத நாள். எந்த ஒரு வீடும் அந்த நாளுக்கும் தங்கள் வீட்டிற்கும் சம்மந்தமில்லை என்று கூறவே முடியாது. எந்த வீட்டிலும் ஏதோ ஒருவகை இழப்பு நிகழ்ந்தே இருக்கும். சேமக்காலையில் கார்த்திகை 2ம் திகதி அன்று நிறைவேற்றப்பட்ட திருப்பலியின் போது பல ஆழமான கருத்துக்கள் மறைமாவட்ட ஆயர் மேதகு யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களால் முன்வைக்கப்பட்டன. இறை வார்த்தைகளிலே நீதிமொழியில் இருந்து எடுக்கப்பட்ட தொடரிலே **"முழுமனதோடு ஆண்டவரை நம்புவது என்பதையும்",** பவுல் அடிகளார் உரோமைத் திருச்சபைக்கு எழுதிய திருமடலிலிருந்து எடுக்கப்பட்ட தொடரிலே குறிப்பிட்டது போன்று **"கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின் அவரோடு வாழ்வோம் என்பதே நமது நம்பிக்கையாகும் என்பதை வலியுறுத்தினார்".**

மேலும் யோவான் நற்செய்தியிலே குறிக்கப்பட்டது போன்று இயேசு வலியுறுத்திய **"கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள் என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள்"** என்பதையும் வலியுறுத்திக் கூறினார்.

வாழ்ந்து மறைந்தவர்களை நினைவு கூரும் போது வாழ்ந்து மறைந்தவர்களூடாக நாங்களும் பல பாடங்களை படிக்க முடிகின்றது. மரணத்தை எப்படி சந்தித்தார்கள், எப்படி சந்திக்க வேண்டும் என்னும் உண்மைகளை வரலாற்று நிகழ்வுகளூடாக அறிய முடிகின்றது. எனவே இந்நாளிலே நம்மோடு வாழ்ந்து மறைந்தவர்களை நினைவு கூர்கின்றோம். மறைந்த ஆன்மாக்களுக்காக நாம் மன்றாடும் அதே வேளையில் நமது வாழ்க்கையையும் நம்பிக்கையூடாக இறைவனுக்கு ஏற்புடையதாக அமைப்பதற்கு முயல்வோம் என்பதை தனது மறை உரையிலே குறிப்பிட்டிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**இறைவனுக்கு இடையறாது நன்றிப் பூக்கள் தூவுவோம்**

# உங்களோடு பேசுகிறேன்..

அருட்பணி N.C அருள்வரதன்

வருடத்தின் இறுதி மாதம். மீண்டும் உங்களோடு பேசுவதற்கு ஒரு வாய்ப்பு. இம் மாதத்தின் சிறப்பினை நோக்கும் போது இயேசுவின் பிறப்பினை நாங்கள் முதன்மைப் படுத்துகின்றோம். இறைவன் வகுத்த திட்டத்திற் கேற்ப இறைமகனார் இயேசு மனிதனாக பிறந்ததை நாங்கள் பெருவிழாவாக கொண்டாடிச் சிறப்பிக்கின்றோம்.

ஆதிப்பெற்றோர் செய்த பாவத்தின் பழியினை நீக்க மானிட வடிவான இயேசு நமக்கென புது வாழ்வு தந்தவர். அவர் தேர்ந்து கொண்ட பிறப்பின் இடம் மாடடையும் குடில். அவர் வந்த விதம் ஏழ்மையின் வடிவம்.

தீவனத்தொட்டியில் இயேசு வளர்த்தப் படுவதற்கு முன்னர் தொட்டி மாறுகின்றது. அழுக்குகள் அகற்றப்பட்டு, புதுவடிவம் பெறுகிறது. இவ்வேளையில் நாமும் இறைமகன் இயேசுவை எமது உள்ளத்திலே பெறுவதற்கு உள்ளங்களை மாற்றி அமைக்க வேண்டும். இறைவன் விரும்பாத கடினங்கள், பகைமைகள், வெறுப்புக்கள், விரோதங்கள், அநீதிகள் பொய்கள் என்னும் தீமைகளை புறந்தள்ளிவிட்டு இறைமகன் விரும்புகின்ற அன்பு, உறவு, இரக்கம், பகிர்வு, உதவும் கரங்களென நாம் உயர்வடையும் போது இறைமகனை எமது உள்ளங்களில் ஏற்க நாம் ஆயத்தமாயுள்ளோம் என்பது தெளிவாகின்றது. எனவே இறைமகன் இயேசுவின் பிறப்பு விழாவை நாங்கள் இனிதே கொண்டாடி மகிழ எனது நத்தார் வாழ்த்துக்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

மேலும் வருடம் முடிந்தவுடன் பிறக்க உள்ளது புதிய வருடம். புதிய வருடத்தில் பல புதிய நிலைகள் உள்வாங்கப்படவிருந்தாலும் நம்மை பொறுத்தவரை திருத்தந்தையின் இலங்கைக்கான வரவு சிறப்பிடத்தைப் பெறுகின்றது. மக்களின் எதிர்பார்ப்புக்களும் ஏக்கங்களும் நிறைந்த வண்ணமிருப்பதையும் எம்மால் உணர முடிகின்றது.

அது மட்டுமல்லாமல் திருத்தந்தையின் வருகையின் போது இலங்கையின் புனிதராக திருநிலைப்படுத்தப்பட உள்ள முத்திப்பேறு பெற்ற ஜோசேப்வாஸ் அடிகளாரின் சிறப்பு நிகழ்வும் பெருமகிழ்வு தரும் நிகழ்வாகவும் அமைய உள்ளதை நாம் மறந்துவிட முடியாது.

எனவே பிறக்க உள்ள புதிய வருடத்திலே முதல் மாதத்திலே திருத்தந்தையின் வருகையையும் இலங்கையின் புனிதராக அறிவிக்கப்பட உள்ள அடிகளாருக்காகவும் நாம் இறைவனை வேண்டி நிற்போம்.

நாட்டிலே அமைதி சமாதானம் நிலை பெறவும் மக்கள் அனைவரும் அன்பை அடித்தளமாகக் கொண்டு உறவுகளைக் கட்டி எழுப்பவும், பேதங்களையும் வேறுபாடுகளையும் விலக்கிவிட்டு ஒரு நாட்டின் பிள்ளைகள் என்கின்ற உயரிய கோட்பாட்டைக் கடைபிடித்து பிறக்கவுள்ள ஆண்டிலே புனிதமாய் வாழ வாழ்த்திக் கொண்டு மீண்டும் உங்களோடு பேசுவேன் என கூறி நிற்கின்றேன்.

## அறிவித்தல்

உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்தநாள், திருமணநாள், இறந்தநாள் ஆகியவற்றை பிரசுரிக்க வேண்டியவர்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்க வேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் தெளிவாக எழுதி எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்

| | | |
|---|---|---|
| கறுப்பு வெள்ளை | 1/4 பக்கம் | - 2500.00 |
| | 1/2 பக்கம் | - 5000.00 |
| கலர் | 1/4 பக்கம் | - 3750.00 |
| | 1/2 பக்கம் | - 7500.00 |

# வத்திக்கான் செய்தி

## பாரம்பரியத் திருமணங்கள் குறித்த பல்சமயக் கருத்தரங்கில் திருத்தந்தை



**"தாழ்மையாக இருப்பது, பிறரின் சுமைகளைப் பகிர்ந்துகொள்வதற்கு நமக்கு உதவுகின்றது."** என்ற வார்த்தைகளை இச் செவ்வாயன்று தனது டுவிட்டர் செய்தியாக வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மேலும் குடும்பம் குறித்த உலக ஆயர்கள் சிறப்பு மாமன்றம் நிறைவடைந்துள்ள இவ்வேளையில், பாரம்பரியத் திருமணங்கள் குறித்த பல்சமயக் கருத்தரங்கு ஒன்றை இம்மாதத்தில் தொடங்கி வைக்கவுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருப்பீட விசுவாசக் கோட்பாட்டுப் பேராயம், இம்மாதம் 17முதல் 19வரை நடத்தும் இக்கருத்தரங்கில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தொடக்கவுரையாற்றி முதல் அமர்விலும் கலந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று நாள் கருத்தரங்கில், 23 நாடுகளிலிருந்து முப்பதுக்கும் மேற்பட்ட சொற்பொழிவாளர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். மேலும், இதில் பல்வேறு கிறிஸ்தவ சபைகளின் பிரதி நிதிகள், இன்னும் யூதம், இஸ்லாம், இந்து ஜைனம், தாவோயசம், சீக்கியம் ஆகிய மதங்களின் பிரதிநி-திகளும் கலந்து கொள்வார்கள்.

"ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான உறவு" என்ற தலைப்பில் இக் கருத்தரங்கு நடைபெறவிருக்கிறது. செழுமையான ஒரு மனித சமுதாயத்தை வளர்ப்பதற்காக, திருமணம் மற்றும் குடும்ப வாழ்வுக்கு ஆதரவளித்து அவற்றை உயிருட்டம் பெறச் செய்யும் வகையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான உறவின் அழகை ஆராய்ந்து அதைப் புதுப்பிப்பதற்குப் பரிந்துரைகள் இக்கருத்தரங்கில் வழங்கப்படும்.

திருப்பீட விசுவாசக் கோட்பாட்டுப் பேராயத்துடன், திருப்பீட குடும்ப அவை, பல்சமய உரையாடல் அவை, கிறிஸ்தவ ஒன்றிய அவை ஆகிய துறைகளும் சேர்ந்து நடத்தவுள்ளது.



# குடும்ப வாழ்வு

## பிள்ளை வளர்ப்பு~ சமூக பொறுப்பா? வெறும் கடமையா?

**சிறுவன் ஹிட்லர்......**

அவனது இளமைப் பருவம் அதிகொடூரமானது. அவனது அப்பா அவனை எதற்கெடுத்தாலும் அடித்து நொறுக்கிவிடுவார். மயங்கிவிழும் அளவுக்கு. அவனது அப்பாவின் அலுவலகப் பெண்மணியிடம் ஒரு முறை கேட்டிருக்கிறான்:

**"வலியைத் தாங்கிக்கொள்ள என்ன வழி?"**

அடுத்தடுத்து அடி விழும் போது, அழக்கூடாது என்று முடிவெடுத்தான். விழும் ஒவ்வொரு அடியையும் விரல் விட்டு எண்ண ஆரம்பித்தான். ஒருமுறை...... அடித்து முடித்தபின் சொன்னான்: "அப்பா என்னை 32 அடி அடித்துள்ளீர்கள்.." இப்படி அடிவாங்கி, வலிதாங்கியவன் தான் எதிர்காலத்தில்.... யூதர்களை அடித்து நொறுக்கினான். 60 இலட்சம் யூதர்களை கொன்று போட்டு உலக சமூகத்திற்கே வலியை உண்டாக்கினான்.

**காரணமற்ற பால்யப் பருவ வலி.....**
**எதிர்கால வரலாற்றின் தலைவலி....**

கொலை, கொள்ளை, களவு, பலாத்காரம் என வான்முறைக் கலாச்சார முகங்களை பிரதிபலிக்கும் சமூகத்தை குறை கூறுவதை ஒருகணம் நிறுத்தி.. **இந் நிலைக்கு காரணம் நானும்தான்.. என்பதை உணர முயலுவோம்.**

**உணர்வு..போதுமா..?** போதாது. ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எம் குடும்பங்களிலேயே தொடங்குவோம். (மூலம்: "பல்சுவை நிகழ்வுகள் - 06, முனைவர் சேவியர் அந்தோனி,சே.ச)

இயக்குனர், குடும்ப வாழ்வுப் பணிகள், திருமலை மறைமாவட்டம்.

# விண்ணிலிருந்து விடியல் ஒன்று

அருட்சகோதரி றோமலா அன்ரனி

அகோரமான நிலநடுக்கங்களும் மண் சரிவுகளும் திடீரென எமது இலங்கை மண்ணிலும், இயற்கை வனப்பு மிக்க மலையகத்திலும் தோன்றி பல மனித உயிர்களை பலியெடுத்ததுடன் சொத்துக்களையும் அழித்துச் சென்றன. ஆயினும் உறவுகளை இழந்த இதய காயங்களும், வடுக்களும் இன்னும் மாறிவிடவில்லை. இந்த நிலையில் இன்னொரு கிறிஸ்து பிறப்பு ஒவ்வொரு மானிடனுக்கும் உணர்த்துவது என்ன? என எமக்குள் கேட்போம்.

கிறிஸ்மஸ் விழாவானது முதன் முதலில் மேற்குத் திருச்சபையிலே கி.பி. 336ம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டு மார்கழி 25ம்திகதி கொண்டாடப்பட்டது. உலகிற்கு சக்தியாகவும், உலகின் இருளுக்கு ஒளியாகவும் விளங்கிய சூரியனுக்கு விழா எடுத்த மக்கள் காலப்போக்கில் தமது இருள் சூழ்ந்த உள்ளத்திற்கு ஒளியாகவும், உலகின் அடிமைத் தனத்திற்கு விடிவெள்ளிக்காகவும் வந்துதித்த கிறிஸ்துவிற்கு விழா எடுக்கத் தொடங்கினர்.

வரலாற்றிலே **"கிறிஸ்மஸ்"** என்ற வார்த்தையானது **"கிறிஸ்மஸ் மேஸ்ஸே"** என்ற வார்த்தையில் வந்தது. இந்த ஆங்கில வார்த்தையின் பொருள் **"கிறிஸ்துவின் திருப்பலி"** ஆகும். மேலும் மேற்குத் திருச்சபை வழிபாட்டில் தந்தையின் உள்ளத்திலிருந்தும், மரியாளின் உதரத்திலிருந்தும், விசுவாசிகளின் ஆன்மாக்களிலும் இயேசு பிறக்கும் முற்பிறப்பை குறிக்கும் முறையில் மூன்று திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டு வந்தன. இந்தப் பாரம்பரியத்தை வெளிக் கொணரும் சொல்லாகவே "கிறிஸ்மஸ்" என்ற சொல் அமைகின்றது.

யூதர்கள் மீட்பருக்காக தலைமுறை, தலை முறையாகக் காத்திருந்தனர். ஆனால் "இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன், இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கின்றார்" என்னும் செய்தியை அறிவிக்க இறைவன் சாதாரண இடையர்களைத் தேர்ந்தெடுத்தார்.

உலக மீட்பரைப் பஞ்சு மெத்தையில் உறங்கி, பட்டு ஆடை அணியும் செல்வர்களல்ல சாதாரணமானவர்களே காண வேண்டும் என இறைவன் திருவுளம் கொண்டார். ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதம் 25ம் திகதி இயேசுவின் பிறப்பு விழாவைக் கொண்டாடுகிறோம். அதற்காக பல மாதங்களுக்கு முன்னதாகவே அகில உலகமும், ஆடைஉற்பத்திகள். உணவுப் பொருட்கள், ஆடம்பரப் பொருட்கள் என மக்களின் கவனத்தை ஈர்த்தவாறாக கிறிஸ்மஸ் கொண்டாட்டத்துக்காக அவர்களை ஆயத்தப்படுத்த தொடங்குகின்றன. நாங்களும் வர்த்தக உலகினால் ஈர்க்கப்பட்டு பணத்தைச் செலவிட்டு எமது சந்தோசத்தை வீடுகளிலும், கோயில்களிலும், பாலன் குடிலிலும் கொண்டாடி மகிழ ஆசைப்படுகின்றோம்.

எத்தனை துன்பங்கள், கவலைகள்,வருத்தங்கள், சோதனைகள் வந்தாலும் நாங்கள் துவண்டு போகமாட்டோம். ஆனால் நாங்கள் தான் இயேசுவை எம்முள்ளங்களில் பிறக்க விடுவதில்லையே எங்களது பொறாமை, பகைமை, பழிவாங்கும் எண்ணங்கள், நான் என்ற அகங்காரம். மற்றவனைக் குழி தோண்டிப் புதைக்கும் சிந்தனைகள், அடக்கியாளும் விருப்புக்கள், ஆடம்பர சுகபோக வாழ்க்கை முறைகள், மற்றவனைப்பற்றிய சிறிதளவும் சிந்தனையில்லாத நிலைகள் இவ்வாறான வாழ்க்கை முறைகளால் பிறக்கின்ற பாலகனை **"பாலன் குடிலிலே"** மாத்திரம் பிறந்து கிடக்க விட்டு விட்டு நாம் பழைய வாழ்க்கை முறைக்குள்ளே திரும்பவும் திரும்பி விடுகின்றோம்.

அணியும் ஆடைகளில் அல்ல, எம் உள்ளக் கோவிலில் தான் இயேசு பிறக்க வேண்டும். மனிதனை மனிதனாக மாண்புடன் ஏற்றுக் கொள்ள ஆசைப்படுவோம். பிறரின் சுதந்திரத்தையும், ஆளுமையையும் மதிப்போம்.

ஏழைகள், சிறுவர்கள், கைவிடப்பட்டோர், முதியவர்களை மதிப்புடனும், மாண்புடனும் நடாத்துவோம். எல்லோருடனும் அமைதியுடனும், சகிப்புத்தன்மையுடனும், பொறுமையுடனும் வாழப் பழகிக் கொள்வோம். நாம் பெற்றிருக்கின்ற உடலாலும், உள்ளத்தாலும் என்றும் கடவுளுக்கு புகழ்ச்சியையும், பெருமையையும் சேர்ப்போம். அப்பொழுது பாலன் இயேசு நிச்சயமாக எங்கள் உள்ளக் கோவிலில் வந்து குடிகொள்வார். எங்களின் மகிழ்ச்சியைப் பன்மடங்காக்குவார். இதற்காகவே விண்ணிலிருந்து விடியல் தம்மைத் தேடி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைமகன் வரவினால்

அருட்பணி N.C அருள்வரதன்

இன்னலுறும் மக்களுக்கு
ஈடேற்றம் தரவந்த
பொன் மனச் செம்மலவர்
பொழிகின்ற அருள் மழையில்
கண்ணெதிரே காண்கின்ற
கடினங்கள் மறைந்துபோக
அன்புருவாம் இறைமகனார்
அமைதி தர வருவாரே

வன்முறைகள் கடினங்கள்
வளர்ந்துவிட்ட போதிலுமே
தன் வரவு நிலையதனால்
தரமற்ற நிலைகள் மாற்றி
இறை சித்த வாழ்வுகளை
ஏற்று அதை வாழ்ந்து வர
உன்னதராம் இறைமகனார்
உரிய வழிகள் தருவாரே

மனிதரை மனிதர் ஏற்று
போற்றியே மதிக்க வேண்டும்
மனிதரை மனிதர் இன்று
மதிப்பதோ மங்கிப்போக
பிளவுகள் பேதங்களாகி
அளவிட முடியாத தீமைகள்
அனர்த்தங்கள் எல்லாமாக
மறையுமே இறைமகன் வரவினாலே

இனங்கள் மதங்கள் மொழிகளாக
பிளவுகள் கண்ட காலமிது
அழுதிடும் கண்களவை
ஆறுதல் கேட்டாலுமே
ஆற்றிடவோ யாரையுமே காணவில்லை
போற்றிடும் இறைமகனார் வரவிதனால்
தூற்றிடும் நிலைகள் கலைந்திடவே
துணைசெய்ய இறைமகனார் வருகின்றாரே

பாவ இருள் நீக்கி மண்ணில்
பரிசுத்த நிலைகள் காண
தீயவழி மாற்றி மாந்தர்
திசைகளையே சீர்படுத்தி
தூய நெறி வாழ்வுதனை
துணைகொண்டு செல்வதற்கு
தான் காட்டும் பாதைதர
தவ மகனார் வருகின்றாரே

# மனித மாண்பு

மனித மாண்பு நோக்கியே
மனது போகும் மாந்தர் நாம்
புனிதமான உறவு பேணி
பிணி இலாது வாழுவோம்.

மண்ணை ஆளும் வீரராய்
விண்ணைச் செல்லும் மானிடா
அன்னை தெரேசா ராணியாய்
உன்னைக் கொஞ்சம் மாற்றுவாய்

என்ன துன்பம் துயரம் வரினும்
இன்னல் எதுவும் இன்றியே
அண்ணல் காந்தி போலவே
எண்ணம் கொண்டு வாழுவோம்

கன்னமொன்றைக் காட்டடா
மின்னல் போன்று அதில் அறைந்து
இன்னல் உற்ற போதிலும் - மறு
கன்னமதைக் காட்டடா

புனித வாழ்க்கை வாழவே
பணி சிறக்க வேண்டினார்
இனிய எங்கள் இயேசுநாதர்
நனி சிறந்து காட்டினார்

குறுகுறுத்த நெஞ்சத்தார்
மறுவகற்ற வேண்டியே
மனதில் உறுதி கொண்ட இயேசு
மனித மாண்பு போற்றினார்

இனிய செல்வம் பெருகவே
கனியாய் மாறி வாழுவோம்
புனித வார்த்தை கூறி நாளும்
மனித வார்த்தை பேணுவோம்

அடலினா அன்டன்
புனித மரியாள் கல்லூரி
திருகோணமலை.

# பரிசுத்த திருத்தந்தையின் வருகை நிகழ்வு

POPE FRANCIS
Sri Lanka 2015



✷ 2015 ஜனவரி 13ம் திகதி காலை 9மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையம் - வருகை.
✷ நீர்கொழும்பு வீதியால் திறந்த பவனியாக கொழும்புக்கு அழைத்து வரப்படல்.
✷ அதன் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களைச் சந்தித்தல்.
✷ 14ம் திகதி காலை 8.30 மணிக்கு காலிமுகத் திடலுக்கு வருகை. அங்கு விஷேட திருப்பலி இடம்பெற்று அருளாளர் ஜோசேப்வாஸ் அடிகளாரை புனிதராக்கும் திருச்சடங்கு இடம் பெறல்.
✷ பின்னர் வானூர்தி மூலம் மடுத்திருப்பதியை அடைதல். அங்கு மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையால் வரவேற்பு.
✷ செபவழிபாடு - தொடர்ந்து திருத்தந்தையின் மறையுரை இடம் பெறும்.
✷ 15ம் திகதி காலை 8மணிக்கு கொழும்பிலிருந்து வத்திக்கான் நோக்கிய பயணம்

# குட்டி மூளைக்குள் குட்டிச் சிந்தனைகள்

எங்களை வண்ண நிலவு என்பார்கள். வாடாத மலர் என்பார்கள். தெவிட்டாத தேன் என்பார்கள் துள்ளிவரும் மான் என்பார்கள். இப்படியாக எங்களை வர்ணித்துக் கொண்டே போகலாம். மேலும் **தி.பாடல் 127:3** சொல்கிறது **"பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம்"**. மக்கட் பேறு அவர் அளிக்கும் பரிசில் எவ்வளவு மகிழ்ச்சியான, உண்மையுள்ள, உயிருள்ள இறை வார்த்தைகள். அது மட்டுமா **மத்தேயு 19:14** இல் **"சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது"** என்று விண்ணரசைக் கூட இயேசு எங்களைப் போன்ற சிறுவர்களுக்கு ஒப்பிட்டுக் கூறியிருக்கின்றார். அப்படியானால் நாங்கள் இவ்வுலகில் எவ்வளவு பெருமைக்கும் மதிப்புக்கும் உரியவர்கள்.

குட்டி இதயம் கொண்ட எங்கள் பலரின் வாழ்வை கருக வைக்கிறார்களே கடுகளவும் இரக்கம் இல்லாத மனிதர்கள். இதனால் நொந்து போகின்றோம். நோகடிக்கப்படுகின்றோம் இப்போது செய்திகள் எல்லாம் எங்களைப்பற்றி தான் பேசப்படுகின்றது. சிறுவர் துஷ்பிரயோகம் என்ற பதத்தினால் பழுதாக்கப்பட்டு பரிசுத்தத்தை களங்கப்படுத்துகின்றனர்.

எங்களை இவ்வுலகம் எப்படியெல்லாம் வழிநடத்த வேண்டும். எங்கள் ஏக்கங்கள், எண்ணங்கள் எவ்வளவு மகிழ்வானவை எங்களுக்கு துள்ளி விளையாட ஆசை எல்லோருடனும் பேசி மகிழ ஆசை.

ஆனால் தற்போதைய காலத்தில் எங்களின் சுதந்திரம் எல்லாமே பறிபோய்விட்டது. எல்லாமே எதிரியாகிவிட்டதே. தனியே போகமுடியாது, பிடித்தவர்களையும் நம்ப முடியாது, உறவுகளைக் கூட நம்பிப் பழக முடியாது. நம்பிக்கையற்ற வாழ்க்கையாகவே மாறிவிட்டது. எந்த புற்றுக்குள் எந்தப் பாம்பு இருக்கிறதோ? தெரியாதே

**"குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று"** என்பார்கள் **"மனிதன் இறைவன் சாயலில் படைக்கப்பட்டான்"** என்று வேதம் சொல்லுகிறது. அப்படியெனில் எங்களைக் களங்கப்படுத்தும் மனித உள்ளங்கள் எல்லாம் மிருகமாகி விட்டதே இதனாலன்றோ **தொ.நூ 6:6** மண்ணுலகில் மனிதரை உருவாக்கியதற்காக ஆண்டவர் மனம் வருந்தினார். அவரது உள்ளம் துயரமடைந்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

எனவே மலரும் மொட்டுக்களான நாங்கள் எவ்வளவு பெருமைக்கும் மதிப்புக்கும் உரியவர்கள் எங்கள் வாழ்வைப் பற்றி ஆழமாகச் சிந்தியுங்கள் இரக்கமற்ற மனித உள்ளங்களுக்காக தொடர்ச்சியாக இறைவனிடம் மன்றாடுங்கள் நாங்களும் சிறுவர்களுக்கான மாண்புடன் வாழ ஆசையாய் இருக்கின்றோம்.

**திருமதி. சரோஜினி சிறில்பத்திநாதன்**
**உவர்மலை**



# முத்திப்பேறுபெற்ற ஜோசப்வாஸ் அடிகளாரின் வினாவிடைப் போட்டி

**முத்திப்பேறுபெற்ற ஜோசேப்வாஸ் அடிகளார் இலங்கையின் புனிதராக திருநிலைப்படுத்தப்படும் நிகழ்வை முன்னிட்டு வாசகர்களுக்கு நடாத்தப்படும் வினா விடைப் போட்டியாகும்.**

**இப்போட்டியானது மார்கழி மாத இதழிலும் தை ~ 2015ம் ஆண்டின் இதழிலும் வெளியாகும், என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். சரியான விடை எழுதி அனுப்புவோரில் 3 அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர். 2015ம் ஆண்டிற்கான விவிலிய நாட்குறிப்பேடு இவர்கள் மூவருக்கும் பரிசாக வழங்கப்படும்.**

01. முத்திப்பேறுபெற்ற ஜோசேப்வாஸ் அடிகளார் எத்தனையாம் ஆண்டு பிறந்தார்?
    1. 1551 2. 1651 3. 1751 4. 1851
02. முத்திப்பேறுபெற்ற ஜோசேப்வாஸ் அடிகளாரின் சொந்த இடமாக அமைவது?
    1. கோவா 2. இங்கிலாந்து 3. ரோமாபுரி 4. பிரான்ஸ்
03. முத்திப்பேறுபெற்ற ஜோசேப்வாஸ் அடிகளார் எக் குலத்தைச் சார்ந்தவர்?
    1. தாவீது குலம் 2. வைஷ்ணவகுலம் 3. பிராமணகுலம் 4. பெஞ்சமின்குலம்
04. முத்திப்பேறுபெற்ற ஜோசேப்வாஸ் அடிகளாரின் உடன் பிறந்த சகோதரர்கள்?
    1. 04 2. 07 3. 09 4. 05
05. முத்திப்பேறுபெற்ற ஜோசேப்வாஸ் அடிகளார் எச்சபையில் சேர்ந்து தனது துறவற வாழ்க்கையை ஆரம்பித்தார்?
    1. ஒறற்தோரியன் சபை 2. இயேசு சபை 3. பிரான்சிஸ்கன் சபை 4. டொமினிக்கன் சபை
06. முத்திப்பேறுபெற்ற ஜோசேப்வாஸ் அடிகளார் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட ஆண்டு?
    1. 1676 2. 1766 3. 1876 4. 1786
07. முத்திப்பேறுபெற்ற ஜோசேப்வாஸ் அடிகளார் எப்பகுதியினூடாக இலங்கை வந்து சேர்ந்தார்?
    1. கொழும்பு 2. மன்னார் 3. கண்டி 4. யாழ்ப்பாணம்
08. முத்திப்பேறுபெற்ற ஜோசேப்வாஸ் அடிகளார் இலங்கை வரக்காரணமாக அமைந்தது எது?
    1. கத்தோலிக்க மதத்தின் வளர்ச்சியை அதிகரிக்க
    2. திருத்தந்தையின் வேண்டுகோளுக்கிணங்க
    3. புரட்டஸ்தாந்து சமயத்தின் பரம்பலும், கத்தோலிக்கர் துன்புறுத்தப்பட்டமையும்
    4. இயற்கையின் அழகையும், வளப்பையும், இரசித்துச் செல்வதற்கு
09. முத்திப்பேறுபெற்ற ஜோசேப்வாஸ் அடிகளார் இலங்கையில் கால் பதித்த ஆண்டு?
    1. 1687 2. 1887 3. 1787 4. 1786
10. இலங்கைக்கு வருகை தந்த ஜோசேப்வாஸ் அடிகளார் எவ்வேடம் தரித்து மக்களை விசுவாசத்தில் வேரூன்றச் செய்தார்?
    1. தொழிலாளி 2. வியாபாரி 3. பிச்சைக்காரன் 4. அரசன்

இப்படிவத்திலே எழுதி அனுப்பவும். அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 31. 12. 2014

பெயர் ..........................................................
முகவரி ..........................................................

# கேளுங்கள் கொடுக்கப்படும்

டீச்சர் : கடவுள் திடீரென கனவில் தோன்றி கேளுங்கள் கொடுக்கப்படும் (மத் 7:7) என்று சொல்லி பணம், அறிவு இது இரண்டில் உனக்கு என்ன வேணும்னு கேட்டா எதைக் கேட்பாய்?
மாணவி : பணம் தான் கேட்பேன்
டீச்சர் : அடச்சீ! நானா இருந்தா அறிவுதான் கேட்பேன்
மாணவி : டீச்சர், யார் யாருக்கு எது இல்லையோ, அதை அதை அவங்க அவங்க கேட்பாங்க இல்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தித்திக்கும் திருப்பாக்கள்"

## திருப்பாடல் - 05

அருட்பணி ரி.கிங்ஸ்லி றொபட்

### இறைபாதுகாப்பு வேண்டிக் காலைச்செபம்

**1-3: ஆண்டவரே கேளும் (விண்ணப்பம்)**

1. ஆண்டவரே, என் விண்ணப்பத்திற்குச் செவி சாய்த்தருளும்; என் பெருமூச்சைக் கவனித்தருளும். 2.என் அரசே, என் கடவுளே, என் கெஞ்சும் குரலை உற்றுக் கேளும்; ஏனெனில் நான் உம்மை நோக்கியே மன்றாடுகின்றேன். 3.ஆண்டவரே, விடியற்காலையில் என் குரலைக் கேட்டருளும்; வைகறையில் உமக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பேன்.

**4-6: ஆண்டவர் தீமையை வெறுக்கிறார்**

4. ஏனெனில், நீர் பொல்லாங்கைப் பார்த்து மகிழும் இறைவன் இல்லை; உமது முன்னிலையில் தீமைக்கு இடமில்லை.
5. ஆணவமிக்கோர் உமது கண்முன் நிற்க மாட்டார்; தீங்கிழைக்கும் அனைவரையும் நீர் வெறுக்கின்றீர்.
6. பொய் பேசுவோரை நீர் அழித்திடுவீர்; கொலை வெறியரையும் வஞ்சகரையும் அருவருக்கின்றீர்.

**7-8 நீதியின் பாதையில் நடத்துவீராக**

7. நானோ உம் பேரருளால் உமது இல்லம் சென்றிடுவேன்; உம் திருத்தூயகத்தை நோக்கி இறையச்சத்துடன் உம்மைப் பணிந்திடுவேன்; 8.ஆண்டவரே, எனக்குப் பகைவர் பலர் இருப்பதால், உமது நீதியின் பாதையில் என்னை நடத்தும்; உமது செம்மையான வழியை எனக்குக் காட்டியருளும்.

**9-10 தீயோரைத் தண்டிக்கிறார் (சாபம்)**

9. ஏனெனில், அவர்கள் வாயில் உண்மை இல்லை; அவர்கள் உள்ளம் அழிவை உண்டாக்கும்; அவர்கள் தொண்டை திறந்த பிணக்குழி; அவர்கள் நா வஞ்சம் பேசும்.
10. கடவுளே, அவர்களின் குற்றங்களுக்குரிய தண்டனையை அவர்களுக்கு அளியும்; அவர்கள் தங்கள் சூழ்ச்சிகளாலேயே வீழ்ச்சியுறட்டும்; அவர்களுடைய ஏராளமான தீச்செயல்களை முன்னிட்டு, அவர்களைப் புறம்பே தள்ளிவிடும். ஏனெனில், அவர்கள் உம்மை எதிர்த்துள்ளார்கள்.

**11-12 நல்லோரை மகிழ்ச்சிப்படுத்துகிறார் (ஆசி)**

11. ஆனால் உம்மிடம் அடைக்கலம் புகுவோர் அனைவரும் மகிழ்வர்; அவர்கள் எந்நாளும் களித்து ஆர்ப்பரிப்பர்; நீர் அவர்களைப் பாதுகாப்பீர்; உமது பெயரில் பற்றுடையோர் உம்மில் அக்களிப்பர். 12.ஏனெனில், ஆண்டவரே, நேர்மையாளருக்கு நீர் ஆசிவழங்குவீர்; கருணை என்னும் கேடயத்தால் அவரை மறைத்துக் காப்பீர்.

இத் திருப்பா ஆண்டவர்மேல் ஆழ்ந்த நம்பிக்கை வைத்துள்ள ஓர் அடியாரின் காலைச் செபமாக அமைவயலாம்.
**"ஆண்டவரே","கடவுளே","அரசரே"** என்று ஆறு முறை ((1,2,3,8,10,12) விளிப்பது இந்த நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.
என்னையும் என்னைச் சுற்றியுள்ளவர்களையும் நான பார்க்கும்போது பயமாக இருக்கின்றது. இன்றைய நாள் எப்படிப் போகுமோ என்ற அச்சம் தலைதூக்குகிறது. ஏனெனில் விடிந்தால் போதும், வேலை என்னும் வெள்ளதில் விழுந்து திணறப் போகிறேன்.
அவநம்பிக்கையும், பொறாமையும் எரிச்சலும் என்னை அரித்துத் தின்னப் போகின்றன. எந்த மனிதனையும் எந்த செயலையும் என்னால் நம்ப முடியாமல் இருக்கிறது. நான் தடுக்கி விழுவதைக் காண பலர் தவங்கிடக்கிறார்கள். தவறான ஓர் அடி எடுத்துவைத்தால் போதும், தலை என் கழுத்தில் தங்காது.
இறைவா, என்னுடன் மக்கள் நேர்மையாகப் பழகச் செய்யும்.
எப்போதும் என்னில் உம் கோயிலை ஏந்தி நடக்கவேண்டும் என்பதை என் மனதில் ஆழமாக பதிய வைத்தருளும். தலைவா நான் வேண்டுவது: உலகோர் என்னில் உன்னைக் காண்டட்டும்; மலர்போல் மென்மையராய் என்னுடன் வாழட்டும்.
நேரிய உள்ளத்தோடு செபிக்கும் மக்களை அவர் என்றென்றும் கைவிடமாட்டார். பாவத்தை வெறுக்கும் அவர் பாவிகளை அன்பு செய்கிறார். மன்னிப்பளிக்கும் மீட்பர் இயேசுவே, எங்கள் குற்றங்களை மன்னித்து, எங்களுக்கு மறுவாழ்வு தாரும் என்று மன்றாடத் தூண்டுகிறது.

(நன்றி: ஆர். சே. இராசா. யே.ச.)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
25
✝
04
✝
1927



உதிர்வு
22
✝
11
✝
2013

அமரர் பே. சந்தியாப்பிள்ளை

"அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் கடவுளின் பிள்ளைகளாகும் உரிமையை அளித்தார்". (யோவான் 1:12)

ஆறாத்துயரில் : குடும்பத்தார்
பாலையூற்று, திருகோணமலை

## ஒளி பிறந்தது

அருட்சகோ. ஞா.மரியநாதன்

அன்று கமலம்மா தன் கணவன் இராசதுரையையும் , மாமனாரையும், மூத்த மகனையும் கடற்கரையில் நின்றபடி வழியனுப்பியவள், ஏதோ கால்தடுமாறி விழுந்து எழுந்து தன் வீடு நோக்கிச் சென்றாள். கடலில் மீன் பிடிக்கும் போது அவர்கள் சாப்பிடுவதற்கு ருசியான உணவுகளைச் சமைத்து போதிய தண்ணீர்க்கலன்களுடன் கொடுத்திருந்தாள். ஆறு ஏழு நாளாகியும் கணவனிடமிருந்து ஒரு செய்தியும் கமலத்திற்கு வரவில்லை. இளைய மகள் குமாரி O/L படித்துக்கொண்டிருப்பவள் இவளும் ஒரே அப்பா, அப்பப்பா, அண்ணரைப்பற்றிய கதையைத்தான் சொல்லிக் கொண்டிருப்பவள்.

பெரிய சமுத்திர நடுக்கடலிலே இவர்களின் படகின் இயந்திரம் பழுதடைந்து விட்டது. மற்ற இயந்திரத்தை எடுத்துக் கொள்ள மறந்து விட்டார்கள். படகு காற்றினால் அடித்து அலைக்குள் அகப்பட்டு தத்தளித்தது. உதவிக்கு யாருமே இல்லை அவர்களின் கையடக்கத் தொலைபேசியும் செயல் இழந்துவிட்டது. கொண்டு போன உணவுகளும் தண்ணீரும் முடிந்து விட்டது. தாகத்தால் நா வறண்டு விட்டது. தாகத்திற்கு உப்புக் கடல் நீரை குடிக்கத் தொடங்கியதால், அதிக தாகம் ஏற்பட்டது. தங்களின் சிறுநீரையும் சேகரித்துவைத்துக் குடிக்கத் தொடங்கினர். மாமனாருக்கு உள் மூச்சு இழுக்கத் தொடங்கிவிட்டது. மரணம் நெருங்கியதை அறிந்த அவர், செததவுடன் தன் உடலை கடலுக்குள்ளே வீசிவிடும்படி சொல்லியபடியே கண்களை மூடினார்.

இறந்த தந்தையின் உடலை மகன் மடிமேல் வைத்து இயேசு இறைவனைப் பார்த்து மன்றாடியபின் இறந்த உடலைத் தூக்கிக் கடலில் எறிந்துவிட்டார். இவர்கள் பெரியசத்தம் போட்டுக் கூப்பிட்டாலும் ஒருவரையும் காணமுடியவில்லை. மூத்த மகனும் தண்ணீர் தாகத்தால் துடிதுடித்துக் கொண்டு இறைவனைப் பார்த்து மன்றாடினார். உடனே சற்று மழை பெய்தது இறைவனுக்கு நன்றி கூறி பாத்திரங்களிலே மழைநீரை நிரப்பி வைத்துக் குடித்தார்கள். அதுவும் சில நாள்களால் முடிவடைந்து விட்டது. மூத்த மகனின் கடைசி நேரமும் வந்துவிட்டது. தனது இளைய சகோதரியை நன்றாகக் கவனித்துக் கல்வி கற்பிக்கும்படி சொல்லிவிட்டு மேலே அண்ணார்ந்து பார்த்து இறைவனை மன்றாடியபடி கீழேவிழுந்து இறந்துவிட்டார். தகப்பன் இறந்த தன் மகனைத் தூக்கி மடிமேல் வைத்து மன்றாடிய பின் கண்ணீர் சிந்தி மகனையும் தூக்கி கடலில் வீசிப் போட்டார். இரண்டு இறந்த உடல்களும் கடலுடன் சங்கமமாகிவிட்டது.

படகும் மெல்ல மெல்ல மாலைத்தீவுக் கடல் பக்கம் அடித்துக் கொண்டு போகப்பட்டது. தூரத்திலே மாலுமிகளின் படகுகள் தெரிந்ததைக் கண்ட தகப்பன் கூச்சலிட்டார். கூச்சலிடவும் உடம்பில் சக்தி இல்லை. உடனே தனது வெள்ளைப் போர்வையைத் தூக்கிப் பல தடவைகள் காட்டி அவர்களின் உதவியை நாடினார். அவர்களும் தங்கள் இயந்திரப்படகை அதி வேகமாக செலுத்திவந்து தகப்பனின் பரிதாப நிலையைக் கண்டனர். தனது கைச் செய்கையினால் இறந்த இரு உடல்களையும் தூக்கிக் கடலில் போட்டதாகவும் காட்டினார். அவர்களும் தகப்பனையும் படகையும் மாலைத்தீவு கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

தந்தை பேசிய சகோதர மொழி அவர்களுக்கு விளங்காததால் வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கத்தையும் பெற்று அங்குள்ள இலங்கைத் தூதுவரின் முயற்சியால் அவரின் வீட்டாரைத் தேடிப்பிடித்து வெகுவிரைவில் வீடு வந்து சேர்வார் என்ற செய்தியைத் தெரிவித்தனர். ஏற்கெனவே மரணவீடாகி இறந்தோருக்கான திருப்பலியையும் ஒப்புக்கொடுத்துவிட்டார்கள். நத்தாருக்கு இரண்டு நாட்களே இருந்தன. தகப்பன் இராசதுரை வீடுநோக்கி வருவதை ஊர்மக்கள் சந்தோஷக் கூச்சலிட்டு அறிவிக்கவே கமலம்மாவும், மகள் குமாரியும் ஓடிப்போய் தகப்பனைக் கட்டிப்பிடித்து ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். பின் வீட்டிலே இராசதுரைக்கு சூடான கோப்பி போட்டு இருந்த சொற்ப சீனியையும் கையில் கொடுத்தாள் கமலாம்மா. ஊரில் இருந்த பெரிய பணக்காரர்கள் உடுப்பு, உணவுப் பொருட்கள், பண நோட்டுக்களையும் கொடுத்து அடுத்தநாள் நத்தார் பண்டிகைக்கு போகும்படி சொன்னார்கள். சிறுவர்களும் பட்டாசு வெடிகள் போட்டு தங்கள் மகிழ்ச்சியையும் தெரிவித்தார்கள். நத்தார் திருப்பலிக்கும் சென்றதோடு பங்குத்தந்தையின் ஆசீரையும் பெற்று தங்கள் வீட்டிலே உண்மையான, ஒளியான, மகிழ்ச்சியான நத்தார் பண்டிகையைக் கொண்டாடினார்கள். இவர்கள் வாழ்வில் மீண்டும் ஒளி பிறந்து விட்டது.

## முத்திப்பேறுபெற்ற ஜோசேப்வாஸ் அடிகளாரின் சிறப்புப் போட்டி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | X | 3 | 4 | 5 | 6 |
| 7 | X | 8 | X | X | X | X |
| X | 9 | 10 | 11 | 12 | 13 | X |
| 14 | X | 15 | X | X | X | 16 |
| 17 | X | 18 | X | 19 | 20 | 21 |

பெயர் ....................................

முகவரி ....................................

**இடமிருந்து வலம்**

1 ~ 2 ஜோசேப்வாஸ் அடிகளாரின் குடும்பப் பெயர்
3 ~ 6 ஜோசேப்வாஸ் அடிகளாரின் தாய் மொழி
9 ~ 13 இவர் எக்குலத்தைச் சேர்ந்தவர்
19 ~ 21 இவரின் சகோதரரில் ஒருவர்

**மேலிருந்து கீழ்**

8 ~ 18 தாயின் பெயரில் ஒரு பகுதி
14 ~ 17 பாப்பரசர் வரும் இடங்களில் ஒன்று

**கீழிருந்து மேல்**

7 ~ 1 அடிகளார் பிறந்த மண்
21 ~ 16 பாப்பரசர் எங்கே இருந்து வருகிறார்

✷இப்போட்டியில் அனைவரும் கலந்து கொள்ளலாம்.
✷இப்படிவத்திலே நிரப்பி அனுப்பவும்.
குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படும்.
1ம் பரிசு ரூபா 500.00/= , 2ம் பரிசு ரூபா 300.00/=

முடிவுத் திகதி 31. 12. 2014

அனுப்ப வேண்டிய முகவரி: முத்திப்பேறுபெற்ற யோசேப்வாஸ் சிறப்புப் போட்டி திருமலைத் தீபம் இல. 297, டொக்கியாட் வீதி , திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி முடிவுகள்

பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.



**கவிதை அனுப்பியோர் - 114 பேர்**

**சரியாக வடிவமைத்தவர்கள் - 02 பேர்**

## சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| செல்வி புளோரிடா ஜேசுதாஸ்<br>இல. 37/6, நீதிமன்ற வீதி<br>திருகோணமலை. | அனிற்றா நவரட்ணசீலன்<br>பேராலயப் பங்கு |

**உங்களுக்குரிய பரிசுத் தொகையை திருமறைக் கல்வி நிலையத்தில் பெற்றுக் கொள்ளவும்**

## கவிதையின் சரியான வடிவமைப்பு



வாழ்த்துவோமே

கொட்டும் பனிக்காலம்
குளிரோங்கி நின்றதே
பட்டு உடை ஏதுமில்லை
பரிதாபக் கோலமங்கே
மாடையும் குடிலதுவே
மாபரனார் தேர்ந்து கொண்டார்
வானவரின் கீதமங்கு
வாழ்த்தி எழும்போது அங்கு
மாமரியாள் மகனை அன்று
மண்ணுலகில் தந்தாளே
வாழ்த்துவோமே அவரை வாழ்த்துவோமே

Fr. N.C

## குறைந்த பட்சம் அன்பிற்காகவாவது......

அருட்பணி. சீ.றோ, ஜெயரெத்தினம்

நம்மிடத்தில் எக்கச்சக்கமாய் இருப்பவை பழமொழிகளும், அறிவுரைகளும் தான். **'கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு'** நம் காதுகளில் அன்று முதல் இன்று வரை எதிரொலிக்கும் பழமொழி இது. படிக்க வேண்டும், பட்டம் பெற வேண்டும்என்ற இலட்சிய வெறி எந்த மாணவனுக்குத் தான் இல்லை? 'படிப்புத்தானே ஒரு மனிதனுக்கு உயிர் மூச்சு.' இப்படித்தான் இற்றைக்கு 466 வருடங்களுக்கு முன் ஸ்பானிய இளைஞன் தனது பத்தொன்பதாவது வயதில், கல்வி கற்று வித்துவானாகிப் பாரெல்லாம் புகழ் பெற எண்ணி ஊர், உறவை விட்டுச் சென்று பாரீஸ் நகரையடைந்தான். அவன் கண்முன்னே தெரிந்ததெல்லாம் கல்வி, பட்டம், புகழ் மட்டுமே!

இளைஞன் தன் கற்பனையை நோக்கிப் புன்னகைத்தான். ஆனால் இறைவனின் திட்டம் வேறாக இருக்கிறதே! இறைவன் இளைஞனை நோக்கிப் புன்னகைத்தார். அவரது ஆத்துமத்தை நோக்கிப் புன்னகைத்தார். இளைஞனது வாழ்வில் குறுக்கிட்டார். முன்னாள் போர் வீரரும், இந்நாள் பாரீஸ் பல்கலைக்கழக மாணவருமான இக்னேஷியஸ் ~ இயேசு சபையை நிறுவ இருந்த புனித லொயோலா இஞ்ஞாசியார் இளைஞனின் ஆத்துமத்தையே அவர் பார்த்தார். சிந்தனை மிகுந்தது. இந்த ஆத்துமம் எத்துணை அழகானது! முகிழ்ந்து, மலர்ந்து மணம் வீச வேண்டிய இது தனது நறுமணத்தால் எத்தனையோ ஆத்துமங்களை இறைவனை நோக்கித் திருப்ப வேண்டிய இந்த ஆத்துமம் கல்வி, புகழ் என்று வீணாகி... காலம் வீணாகக் கூடாது.

வாயிலிருந்து வந்தாலும் அது விவிலிய வசனமல்லவா? இளைஞனின் மனத்தின் மூலை முடுக்கெல்லாம் முட்டி மோதி எதிரொலித்து, எதிரொலித்து மனதைக் குழப்பி கலக்கி... 'அது ஏதோ சொல்கிறது போலுள்ளதே ...ம்'..... மீண்டும் மீண்டும், மீண்டும், மீண்டும்..... 'அடடா, நான் எங்கே எங்கே போய்க் கொண்டிருக்கிறேன்? மனம் தெளிந்த போது வழி பிறந்தது. உள்ளம் கசிந்து, உயிர் உருகி இறைவனை நோக்கி அந்த இளைஞன் திரும்பிய போது ஒரு புனிதன் பிறந்தான். ஆம், இயேசு சபையின் முதற்கனி அவர்..அவர் புனித பிரான்சிஸ் சவேரியார். இன்று வேத போதக நாடுகளின் பாதுகாவலராகப் போற்றப்படும் அந்த இளைஞன் மனிதனை நோக்கிப் பார்வையைத் திருப்பி, ஆத்துமங்களை நோக்கித் தன் காலடிகளை எடுத்துவைக்க, எடுத்து வைக்க... **எல்லாம் இறைவனின் அதிமிகு மகிமைக்காக.** எத்தனை புதுமைகள், மனமாற்றங்கள் எல்லாம் இறைவனின் மகிமைக்காகவே. தன்னையே ஒறுத்து துன்பங்கள் பல தாங்கி, வேதனைகளை இறைவனுக்காக ஏற்று எல்லாம் இறைவனின் மகிமைக்காகவே!

அந்த உள்ளம் பட்ட வேதனை, துன்பம், அவர் கால்கள் நடந்த பாதையில் தடைகள், குத்திக் கிழித்த முட்கள், எதிர்கொண்ட சுமைகள், வேதனைகள்.. இறைவனுக்காகவே! ஆத்துமங்களுக்காகவே! எல்லாம் இறைவனுக்கே என அர்ப்பணித்து ஏற்ற அந்தப் புனிதன் இன்றும் எங்களிடையே ஆற்றிவரும் புதுமைகள் தான் எத்தனை, எத்தனை! அந்த ஆத்துமம் தான் எத்துணை அழகானது!எம்முன் ஒளி வீசும் சவேரியாரின் வாழ்வில் நாம் கற்க வேண்டிய பாடங்கள் எத்தனை எத்தனை? ஒரு கணம் சிந்திப்போம். **மனித மாண்பைக் காக்க வேண்டிய நாம் சக மனிதனைக் கீழே போட்டு மிதிக்கிறோமா? பண்பைப் பார்த்து வாழ வேண்டிய நாம் படிப்பையும் பதவியையும் பார்த்து அவனை ஒதுக்குகிறோமா? ஆத்துமத்தை நேசிக்க வேண்டிய நாம் ஆன்ம ஈடேற்றத்தை மறந்து அலைகின்றோமா? மனிதராய் வாழ வேண்டிய நாம் மந்தையாகி விட்டோமா? மரங்களாகி விட்டோமா? சிந்திப்போம் மனித மனங்களா, மனிதர் கற்ற கல்வியா பெரிது?** மனிதனை அவன் கற்ற கல்வியைக் கொண்டு கணிப்பதா? அவன் ஆன்ம அழகைக் கண்டு அணைப்பதா? எது முக்கியம். **கேள்விகளே புனிதர்களை உருவாக்கின~ உருவாக்குகின்றன.** புனிதர்களாக அல்லாவிட்டாலும் கடைசி மனிதர்களாவது... ஆத்துமங்களுக்காக இல்லாது போனாலும் குறைந்த பட்சம் அன்பிற்காகவாவது..

# திருகோணமலை மறைமானிலச் செய்திகள்

## பாலையூற்றில் சிறுவர்தின கொண்டாட்டம்

05. 10. 2014 அன்று பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தலத்தில் மறைக்கல்வி மாணவர்களுக்கு சிறுவர் தினத்தை முன்னிட்டு விளையாட்டு போட்டி நடைபெற்றது. இப் போட்டியில் அருட்பணி மதுராங்கன் குரூஸ், அருட்பணி அன்று ஸ்மபன், மறைஆசிரியர்கள் மேய்ப்புப்பணி அங்கத்தவர்கள் ஒன்றிணைந்து நடாத்தினார்கள். மரதன் ஓட்டம் உட்பட பல வித்தியாசமான விளையாட்டுக்களை முன்பள்ளி தொடக்கம் தரம் 11 வரை வகுப்பு ரீதியாகவும் மற்றும் இளைஞர், பெற்றோர் அனைவருக்கும் போட்டிகள் வைத்து பரிசில்களும் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து பி.ப 7மணியளவில் கலைநிகழ்வும் நடைபெற்றது.

## தூய வின்சன் டீ பவுல் திருவிழா

இலிங்கநகர் தூய வின்சன் டீ பவுல் சபையினர் 05. 10. 2014 ஞாயிறு அன்று தமது பாதுகாவலராகிய தூய வின்சன் டீ பவுலின் விழாவினை நன்றிப்பலி ஒப்புக்கொடுத்து, விசேட தேவையில் உள்ளவர்களுக்கு அன்பளிப்புகளை வழங்கியும் அன்றைய நாளை சிறப்பித்தனர். புகைப்படத்தில் பங்குத்தந்தை இ. யூட்சர்வானந்தன் அவர்களோடு தூய வின்சன் டீ பவுல் சபையின் குழுவினர்.

## இலிங்கநகர் தூய யூதாததேயு ஆலய வருடாந்தத் திருவிழா

இலிங்கநகர் தூய யூதாததேயு ஆலய வருடாந்தத் திருவிழா 17. 10. 2014 அன்று பங்குத் தந்தை இ. யூட்சர்வானந்தன் அவர்களது வழிநடத்தலில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி. 26. 10. 2014 அன்று திருவிழாக் கூட்டுத் திருப்பலி திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதி.வந். யோசப்கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. மேலும் அருட்பணி X.I. ரஜீவன் அவர்களால் விஷேட நிகழ்வாக குடும்பஸ்தர்கள், மறைக்கல்வி ஆசிரியை மாணவர்களுக்கான சிறப்புக் கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டது.

## அருளாளர் யோசப்வாஸ மூப்பர் அமைப்பு

திருகோணமலை மறைமாவட்டத்தில் முதன் முறையாக அருளாளர் யோசப்வாஸ் மூப்பர் அமைப்பு பங்குத்தந்தை இ. யூட்சர்வானந்தன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு இலிங்கநகர் யூதாததேயு ஆலய வருடாந்தத் திருவிழாவின்போது எமது மறைமாவட்ட ஆயர் அதி.வந். யோசப்கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, ஆசீரும் அருளப்பட்டது.

## தூய மரியாள் பேராலய கத்தோலிக்க இளைஞர் தினம்

கடந்த 26.10.2014 அன்றுகாலைத் திருப்பலியை மறைமாவட்ட குருமுதல்வரும், தூய மரியாள் பேராலயப் பங்குத்தந்தையுமான அருட்பணி தே.கிங்ஸ்லி றொபட் அவர்களால் இளைஞர் தினத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இத் திருப்பலியை பேராலய கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய உறுப்பினர்களே சிறப்பித்தார்கள். திருப்பலி நிறைவில் தங்கள் அர்ப்பண வாழ்வையும் புதுப்பித்தார்கள்.

மேலும் மாலை 7.00 மணியளவில் பேராலய உதவிப் பங்குத் தந்தை அருட்பணி ச.அ. செபஸ்ரியன் றெவல் அ.ம.தி அவர்களாலும் பேராலய இளைஞர் ஒன்றிய உறுப்பினர்களால் செபஸ்தியார் புரத்திலுள்ள வறிய மூன்று குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

## இறந்த ஆயர்கள், குருக்கள், துறவிகள், அருட்சகோதர சகோதரிகள், பொதுநிலையினருக்கான ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி

கார்த்திகை 10ம் திகதி மாலை 05.00மணிக்கு தூய மரியாள் பேராலயத்தில் எமது மறைமாவட்ட ஆயர் அதி.வந். யோசப் கிங்ஸ்லிசுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி மூன்று மொழிகளிலும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருகோணமலை மறைமாவட்டத்திலுள்ள அருட்பணியாளர்கள், அருட்சகோதர சகோதரிகள், பொது நிலையினர் ஆகியோர் கலந்து கொண்டு ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடினார்கள்.

## பிறந்தநாள் கொண்டாட்டம்

11. 11. 2014 அன்று பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தலத்தில் பணியாற்றும் பங்குத்தந்தை அருட்பணி செ.மதுராங்கன் குரூஸ் அவர்களின் 38வது பிறந்த தின நாளை பங்கு மக்கள் சிறப்பாக நடாத்தினார்கள். இந் நிகழ்வானது பி.ப 05.00மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அனா நிலையத்தில் கலை நிகழ்வோடு இணைந்த பிறந்த நாள் கொண்டாட்டமும் நடைபெற்றது.

## பாலையூற்று முன்பள்ளி பட்டமளிப்பு

15. 11. 2014 அன்று மு.ப 9 மணிக்கு பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தலத்தில் அமைந்துள்ள இதய தீபம் முன்பள்ளியிலும் கல்விபயிலும் 45 சிறுவர்களுக்கு, பட்டம் அளிக்கும் வைபவம் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு அருட்பணி. ஜோர்ச் திசநாயக்கா அவர்கள் பிரதம விருந்தினராகவும், முன்பள்ளி இயக்குனர் அருட்பணி செ.மதுராங்கன் குரூஸ் அவர்களும் இணைந்து சிறுவர்களுக்கு பதக்கம் அணிவித்து சான்றிதழும் வழங்கி இந்நிகழ்வினை சிறப்பித்தார்கள்.

## புனித மரியாள் பேராலய பீடப்பணியாளரின் திருவிழா(பாதுகாவலர் தூய பெர்மன்ஸ் அருளப்பர்)

17. 11. 2014 அன்று ஞாயிற்றுக் கிழமை காலை 6.45மணி திருப்பலியை பேராலய பீடப்பணியாளர்கள் சிறப்பித்தனர். அன்றைய தினம் மாலை 7.00 மணிக்கு கலை நிகழ்வுகளும் விருந்துபசாரமும் இடம் பெற்றது. இறுதியாக உதவிப் பங்குத்தந்தையின் இறுதிச் செபத்துடனும் பங்குத்தந்தையின் ஆசீருடனும் இந் நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நத்தார் மரம்

திருமதி ஜெ. கீதபொன்கலன்

அன்று மார்கழி 20ம் திகதி மாலை வேளை நின்னு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தாள். ஜெய்ஷாவும் அவளுடைய அப்பாவும் சவுக்குமரம், வைக்கோல் என்பவற்றைக் கொண்டு வந்ததைக் கண்டு நின்னு **"தாத்தா, தாத்தா"** எனக் கூப்பிட்டுக் கொண்டே தாத்தாவிடம் ஓடினாள். "தாத்தா ஜெய்ஷாவும் அவளுடைய அப்பாவும் சவுக்குமரம், வைக்கோல் இன்னும் நிறையப் பொருட்கள் கொண்டு போகிறார்கள், ஏன் தாத்தா" என நின்னு கேட்டாள்.

பேப்பர் வாசித்துக் கொண்டிருந்த தாத்தா நின்னுவின் கேள்விக்குப் பதில் சொல்லத் தொடங்கினார். "மார்கழி 25ம் திகதி இயேசு பாலனின் பிறப்பைக் கொண்டாடப் போகின்றோம். இன்று பின்னேரம் நாங்களும் நத்தார் மரம், நத்தார் குடில் சோடிக்கப் போகிறோம் என்றார். ஜெய்ஷாவும் அவளுடைய அப்பாவும் நத்தார் மரம், நத்தார் குடில் சோடிக்கப்போகிறார்கள் என்றார். இயேசு பாலன் பிறப்புக்கு நத்தார் மரம், நத்தார் குடில் ஏன் வைக்க வேண்டும்? என மீண்டும் கேள்வி கேட்டாள் நின்னு. சரி சரி விளக்கம் சொல்லுகிறேன் என்றார் தாத்தா.

நத்தார்மரம் நத்தார் கொண்டாட்டத்தின் ஓர் அங்கமாகும். இதனைக் கிறிஸ்தவ பக்தர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். ஜேர்மனியில் ஒரு சில பகுதிகளைத் தவிர ஏனைய நாடுகள் அனைத்தும் நத்தார் மரம் வைக்கும் பழக்கத்தைத் தொன்று தொட்டே கடைப்பிடித்து வருகின்றனர்.நத்தார் மரம் வைக்கும் பழக்கம் ஜேர்மனியின் நாடகக் கலை ஆரம்பத்தோடு உருவாகியது.

நாடகக் கலையின் போது **"சிங்காரத்தோப்பு"** பற்றிய செய்தியை முன் வைப்பதற்கு அப்பிள் பழங்கள் தூக்கப்பட்ட **(FIR)** பர் மரங்களைப் பாவித்தார்கள். **"தாத்தா சிங்காரத் தோப்பு"** பற்றி எனக்குத் தெரியும்.

நல்லது நின்னு, இன்னும் கொஞ்சம் விளக்கிச சொல்வதைக் கேள் என தாத்தா தொடர்ந்தார். ஆலயங்களில் நத்தார் நாடகம் நடத்தும் போது, அதே மரத்தை கொழுத்தப்பட்ட மெழுகுதிரிகளால் அலங்கரித்தார்கள். நத்தார் நாடகங்கள் ஆலயத்துள் நடத்துவது தடை செய்யப்பட்ட பின்னர், நத்தார் மரம் கிறிஸ்தவ பக்தர்களின் வீடுகளுக்கு கொண்டு வரப்பட்டது. நத்தார் நாடகங்கள் ஒழிந்து போனாலும் கூட நத்தார் மரம் மீட்பின் அடையாளமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அண்மைக் காலத்தில் மரத்தாலான **"பிரமிற்"** நத்தார் மெழுகுதிரியாக பாவிக்கப்பட்டது. காலப் போக்கில் உலகின் ஒளியாகிய கிறிஸ்துநாதரின் அடையாளமாக விளங்கிய பிரமிற்றின் மெழுகுதிரியும், ஏனைய அலங்காரப் பொருட்களும் நத்தார் மரத்தை அலங்கரிக்கப் பாவிக்கப்பட்டன.

நத்தார் மரத்தின் உச்சியில் நட்சத்திரம் காட்சிப்படுத்தப்படும். நத்தார் மரத்தின் ஆரம்பத்திற்கு காரண கர்த்தாவாக கௌரவிக்கப்படுபவர் மார்ட்டின் லூர்த்தர் ஆவார். ஆயினும் ஆரம்பம், அடையாளம் என்பன அவருக்கு முன்னர் புராதன ஜேர்மனி வரலாறு வரை பரந்து செல்கிறது.

இன்றும் இனமத பேதமின்றி அனைவரும் மீட்பரின் அடையாளமாகத் திகழும் நத்தார் மரத்தை வீடுகளில் அலங்கரிப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது அல்லவா? எனக் கதை சொல்லி முடித்தார் தாத்தா.

# கிறிஸ்மஸ் தாத்தா

-Fr. NC-



கிறிஸ்மஸ் பரிசுப் பொருட்களைத் தங்கள் கற்பனையில் கொண்டு உறங்கும் குழந்தைகளைப் பரவசப்படுத்தும் கிறிஸ்மஸ் பண்டிகையானது, அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது என்றால், அதற்கு காரணம் சண்டா (Santa) எனும் படைப்பு தான்.

இவர் விளையாட்டுப் பொருட்களை, இனிப்புப் பண்டங்களை வாரியிறைத்துச் செல்வதாக சிறுவர்கள் நம்புகின்றார்கள். இந்த சண்டா (Santa) என்பவரை சிறப்பாக "கிறிஸ்மஸ்" தாத்தா என்றும் அன்புடன் அழைக்கின்றனர். இவர் கிறிஸ்மஸ் பண்டிகையின் போது நரைத்த தாடியுடனும், சிவப்பும் வெள்ளையும் கலந்த ஆடைதரித்து எட்டுக் கலைமான்கள் பூட்டிய விளையாட்டுப் பொருட்கள் நிறைந்த "ஸ்லெட்ஜ்" எனும் சக்கரமில்லாத வண்டியில் மேகங்களிடையே வருவார் என்பது குழந்தைகளின் எண்ணம்.

வீடுகளிலே புகைபோக்கியின் வழியே இறங்கி அங்கே தொங்கவிடப்பட்டிருக்கும் காலுறைகளில் பரிசுகளை நிரப்பிவிட்டு செல்வதாக குழந்தைகள் எண்ணுகின்றனர்.

ஏனென்றால் இவர் குழந்தையோடு குழந்தையாக வாழ்ந்தவர் செயின்ற் நிக்கொலஸ் (saint nicholas) என மருவி வந்து போனாலும் மேலை நாடுகளிலும் பெரியவர்கள் சண்டா (Santa) மாறி பரிசுகள் கொடுப்பதும் வழக்கம். இந்த சாண்டா (Santa) வேறு யாருமல்ல இவர் தூய நிக்கலோஸ் தான். இவர் சாண்டா (Santa) மாறியதற்கு ஆதாரம் அவர் வாழ்க்கையிலே நடந்த ஒரு நிகழ்சியாக இருக்கலாம்.

4ம் நூற்றாண்டில் ஆசியா மைனர் என்னும் நாட்டில் மைரா என்னும் மறைமாவட்டத்துப் பேராயராக இருந்தவர் தூய நிக்கலோஸ். இவருடைய திருவிழாவை நாம் டிசம்பர் 6ம் நாளில் கொண்டாடுகின்றோம்.

1600ம் ஆண்டுகளுக்கு முன் மறைந்த ஒரு பெரியார் இன்னும் நம் சிந்தையில் நிலைக்கிறார் என்றால் அது மிகையாகாது. அது அவரின் மகத்துவமே. ஏழைகள் நடுவில் ஏழையாக வாழ்ந்த இவர் குருவாக பணியாற்றிய காலத்தில் தன் பெற்றோர் விட்டுச்சென்ற செல்வத்தை ஏழைகளுக்கு வாரி இறைத்தவர். புரிகிறதா இப்பொழுது கிறிஸ்மஸ் நள்ளிரவில் பரிசு கொண்டு வரும் தாத்தா (saint nicholas) செயின்ற் நிக்கலொஸ் - சன்டா க்ளோஸ் என்று.

## கிறிஸ்து பிறப்பிலே

Rev.FR. Sutharshan

தெய்வத் திருமகனின் - ஜனனம்
தேவ லோகத்திலும் பூலோகத்திலும் - அக்களிப்பாம்
தேவனே மனிதனானார்
மாந்தர் யாவரும் மகிழ்வோம் - கிறிஸ்து பிறப்பிலே

விண்ணக மணவாளனின் - அவதாரம்
விண்ணகத்திலும் மண்ணகத்திலும் - ஐக்கியமாம்
தெய்வமே மகனானார்
மானிடர் யாவரும் அக்களிப்பாம் - கிறிஸ்து பிறப்பிலே

ஏழை எளியவரின் நற்செய்தியின் - பிறப்பு
எட்டு திசைகளிலும் திக்கிலும் - ஒன்றிப்பாம்
வார்த்தையே மனுவானார்
மக்கள் யாவரும் சங்கமிப்போம் - கிறிஸ்து பிறப்பிலே

# குட்டிக் கதை

**"கடவுள் இல்லை"** என்று கூறும் நாத்தீகக் கூட்டமொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. **"கடவுள் இல்லை"** என்று கூறி ஒருவர் பேசிக் கொண்டிருக்கிறார்.

சனங்கள் கூடி இருக்கிறார்கள். இறுதியிலே பேச்சின் பின்னர் நேரம் கொடுக்கிறார், கேள்விகள் கேட்பதற்காக. அப்போது ஒருவர் மேடைக்குச் சென்று **"மைக்"** முன்பாக நிற்கின்றார். நின்றவர் தனது **"பொக்கற்றில்"** அப்பிள் பழமொன்றை எடுத்து கையிலே வைத்திருந்த கத்தியால் சிறிது சிறிதாக வெட்டி ஒவ்வொரு துண்டாக சாப்பிடுகிறார்.

பேச்சாளருக்கு கோபம் வந்து விட்டது. **"கேள்வி கேட்க வந்தவன் கேள்வி கேட்காமல் பழம் சாப்பிடுகிறானென்று".** என்றாலும் பொறுத்துக் கொண்டார்.

எல்லா பழத்தையும் சாப்பிட்டவர் பேச்சாளரிடம் கேட்டார் **"ரேஸ்ற்"** எப்படி என்று. அதற்கு பேச்சாளர் சொன்னார் **"நீர் சாப்பிட்டுவிட்டு என்னிடம் "ரேஸ்ற்"** கேட்கிறீரே என்று, அதற்கு பழத்தைச் சாப்பிட்டவர் சொன்னார்.

உண்மைதான். சரிதான் சுவைத்தவர் தான் சுவையை; சொல்வார். நீரும் இறைவனைச் சுவைக்கவில்லை அதனால் உமக்கும் இறைவனைப் பற்றி சுவை தெரியாது. உண்மைதானே என்று. அது எதுவாக இருந்தாலும் சுவைத்தவரே சுவையைக் கூறமுடியும்.

# மா பாலன் பிறப்பின் மகிமை



மார்கழி மாதமதே
மாமரிபேறு காலமதே
மானிட மக்களை மீட்டிடவே
மானிடம் தரித்த மாதமாமே

மாசறு கன்னியவர்
மாந்தர்மேல் பரிவு கொண்டு
மாதேவன் சொன்ன வாக்கை
மாண்புடன் தலை அசைத்தார்

மந்தையும் விடிந்ததென்று
மாக்களும் இசையெழுப்பி
மரிமைந்தன் பிறப்பைக் கண்டு
மா மா வென்று கத்தினவே

மாக்களை மேய்த்த இடையர்
மாவோசை கேட்டதுமே
மாடடை குடில் நோக்கி
மகிழ்வுடனே சென்றாரே

மாஞானிகள் மூவருமே
மாண்புறு வெள்ளிகண்டு
மகிமைநிறை பெத்லகேமில்
மண்டியிட்டு வணங்கினாரே

மாபேறாம் மார்கழியாம்
மாதத்தின் பாலன் பிறப்பாம்
மக்கள் நாம் கொண்டாடியே
மகிழ்ந்து நம் வாழ்வில் காட்டுவோமே



ஆக்கம்:-
அருட். சகோ. ஞா.
மரியநாதன் (பு.பி.ம.ச)
மாத்தளை

# புனித சவேரியார்



- 1506 ஏப்ரல் 7ம் திகதி பிறந்தார்.
- தாய், தந்தை பெயர் நவரா, டோனாமரியா.
- இவரது கிறிஸ்தவப் பெயர் பிரான்சிஸ், குடும்பப் பெயர் சவேரியார்.
- இவரது சகோதரர்கள் 04 பேர், இவர்தான் இளையவர். இவர் ஒரு அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்.
- 1525ல் பாரீஸ் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டார்.
- இவர் லொயோலா இஞ்ஞாசியாரால் மனமாற்றம் பெற்றார்.
- 1534ல் இயேசு சபையில் இணைந்து குருமடக் கல்வியை மேற்கொண்டார்.
- 1537 ஜூன் 4ல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.
- 1541ல் இந்தியாவை நோக்கிப் புறப்பட்டார்.
- 1547ல் இலங்கைக்குச் சென்று சில மாதங்கள் தங்கி மறைபணியாற்றினார்.
- 1552ல் சான்சியன் என்ற சீனத் தீவில், டிசம்பர் 3ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை இறைபதம் அடைந்தார். இறக்கும் போது அவருக்கு வயது 46.
- 1553ல் மட்டக்களப்புத் துறைமுகத்தில் அவரது "திருச்சரீரம்" கொண்டு வரப்பட்டபோது திரளான மக்கள் வணக்கம் செலுத்தினர்.
- 1554 மார்ச் 15ம் நாள் கோவாவில் "திருச்சரீரம்" பெரும் ஆடம்பரமாக வரவேற்கப்பட்டு பொன்ஜேசு தேவாலயத்தில் வைக்கப்பட்டது.
- 1622ம் ஆண்டு சவேரியார் புனிதராகத் திருநிலைப் படுத்தப்பட்டார்.
- 1663ல் இவருடைய திருநாள் உரோமைப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.
- இன்று வரை "பாரதத்தின் செல்வம்" என அவரது திருச்சரீரம் போற்றப்பட்டு வருகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்கழி மாத கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி
## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 04
## தூய லூக்கா நற்செய்தி 01 - 04

**அன்பார்ந்த வாசகர்களே**
"விடுபட்ட எழுத்துப்புதிர்" போட்டியானது விவிலியத்தில் குறிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி விடுபட்ட சொற்களை அல்லது வசனங்களை விவிலியத்தில் கண்டுபிடித்து கீழே தரப்பட்ட கட்டங்களுக்குள் முதல் எழுத்துக்கு அமைவாக கண்டுபிடிக்க முடியும். இப்படிவத்திலே விடைகளை எழுதி அனுப்பவும் குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படும்.
1ம்பரிசு 500/=, 2ம்பரிசு 300/=, 3ம்பரிசு150/=, அனுப்ப வேண்டிய முகவரி :
**விடுபட்ட எழுத்து புதிர் போட்டி 04. திருமலைதீபம் 297 டொக்கியாட் வீதி, திருகோணமலை.**
**அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 31. 12. 2014**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தா | | வ | | | | | பெ | | ஏ |
| | | வா | ■ | ஏ | வீ | | | | |
| அ | ■ | | பா | | | | | | |
| | க | | | | | | | | |
| | | | | | | | | த | |
| | | | | | | | ■ | | |
| | | | | | | | அ | | நா |
| | | ந | ■ | | | | | | |
| ■ | | | | தி | ■ | | | | உ |
| இ | | | | | | ம | | நீ | |

1. எ.....சபெ......து 2. தா......வயி.....றில் 3. க......வு......ன தி.....மு...... 4. நி.....பவன் 5. அ.....ள் மிகப் பெ...... ......வரே வா......க 6. மகி......ச்......யூ......டும் ந.....செய்......யை 7. வீ.....ச்சி.....கும் எ....ச்சி.....கும்
8. இ.......யர்......ள் 9. உ........ அ......யான்
10. பா.......கா வி..... 11. நா..... த....... ணீரா.......

பெயர் .......................................................
முகவரி .......................................................
பங்கு .......................................................

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 02
## தூய மத்தேயு நற்செய்தி 6-10
## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| எ | ■ | இ | டு | க் | க | மா | ன | ■ | சொ |
| ச் | பா | ■ | ■ | இ | ளே | கை | நு | லை | ல் |
| ச | வி | வ | ன் | ரு | க | ம் | ழை | ல் | லு |
| ரி | க | ழி | லி | ங் | ர் | மா | யு | வி | ம் |
| க் | ளை | யே | யி | க | வ | று | ங் | க | ■ |
| கை | யே | ■ | வா | ள் | ய | பெ | க | க் | வா |
| யா | ■ | சி | று | மி | றி | றா | ள் | ற | ர் |
| ய் | அ | ழை | க் | க | ன் | ம | ■ | இ | த் |
| ■ | ம | ட் | டு | ம் | கு | ல் | ■ | ■ | தை |
| ந | ம் | பி | க் | கை | ■ | ன் | தே | ந் | வ |

01. எச்சரிக்கையாய் 02. இருங்கள் 03. இடுக்கமான
04. வாயிலின் 05. வழியே 06. நுழையுங்கள்
07. வார்த்தை 08. மட்டும் 09. சொல்லும் 10. நம்பிக்கை
11. குன்றியவர்களே 12. பாவிகளையே 13. அழைக்க
14. வந்தேன் 15. சிறுமி 16. இறக்கவில்லை
17. கைம்மாறு 18. பெறாமல்

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும்,நன்றிகளும்.**

**பரிசுக்குரியவர்கள் :**


**1ம் பரிசு 500/=**
செல்வன். சோய்ஸ் கிளின்டன்
3ம் வட்டாரம், நிலாவெளி

விடைகள் அனுப்பியோர் -16
சரியானவிடை எழுதியவர்கள் -14

**2ம் பரிசு 300/=**
செல்வன். டிலுசன் குணசேகரன்
221, லூர்து ஆலயவீதி
பாலையூற்று

**3ம் பரிசு 150/=**
செல்வி அ.கரோலினி கீர்த்திகா
57, தபால்நிலைய வீதி
பேராலயம்

**பாராட்டுக்குரியவர்கள் :**
☆ செல்வி. டெ. இவான்ஜலின் உவர்மலை
☆ செல்வி. யோ.அருஷன் அன்புவழிபுரம்



☆ திருமதி. மதுரா கெனடி - பேராலயம்
☆ செல்வி. R.F பியூலா டானியலா -பேராலயம்
☆ செல்வி. கிறிஸ்டி றோஷினி - பாலையூற்று
☆ செல்வி. ஆன்வஜீரா - பேராலயம்
☆ செல்வி. ஜே.புளோரிடா - பேராலயம்
☆ செல்வன். குளோரியஸ் - சிறியகுருமடம்
☆ செல்வி. அன்ரனி கிமோனி - ஆனந்தபுரி
☆ செல்வன். பூ. தமிழ்ச்செல்வன் குவாடலூப்பே
☆ செல்வன். சு.பகிரதன் - அன்புவழிபுரம்

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர்போட்டி எண் ~ 11
## தூயமத்தேயு, தூயலூக்கா நற்செய்திகள் அதிகாரம் 1 ~ 3 வரை

01. நீர் எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்திற்கு தப்பி ஓடிச்செல்லும் எனக் கூறியவர்?
**விடை:**..................................................
02. இயேசுவின் பிறப்பின் போது மக்கள் கணக்கெடுப்பை நடத்திய சீரியாவின் ஆளுனர் யார்? **விடை:**.........................
03. திருமுழுக்கு யோவானுடைய பெற்றோர் அபியா வகுப்பைச் சேர்ந்தவர்கள் அவர்கள் எந்த வம்சத்தார்?
**விடை:**..................................................
04. "மரியா அஞ்சவேண்டாம் கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர் எனவும் இதோ கருவுற்று ஒருமகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். உன்னத கடவுளின் மகன் எனப்படுவார்" என்று யார் யாருக்கு அறிவிக்கப்பட்டது.
**விடை:**..................................................
05. "மெசியா" என்பதன் சிறப்புப் பெயர் யாது?
**விடை:**.........................................
06. அவரது விண்மீண் எழக்கண்டோம் அவரை வணங்க வந்திருக்கிறோம் எனக் கூறியவர்கள் யார்?
**விடை:**.........................................
07. "நான் ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே நிகழட்டும்". என்று மரியாள் யாருக்கு கூறினார்? **விடை**.......................
08. செக்கரியா எனும் குருவானவருக்கு, ஆண்டவருடைய வானதூதர் அவருடைய மகனின் பிறப்பைப் பற்றி கூறும் போது அவர் எங்கு இருந்தார்? **விடை:**....................
09. "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது". இப்பாடலைப் பாடியவர் யார்? **விடை:**..............................
10. பாலைவனம் என் இருப்பிடம், வெட்டுக் கிளியும், காட்டுத்தேனும் என் உணவாகும். மெசியாவுக்கு நான் முன்னோடி எனினும் அவர் மிதியடிவாரை அவிழ்க்கக்கூடத் தகுதியற்றவர். இவர் யார்?
**விடை:**..................................................

பெயர் .........................................
முகவரி .........................................
பங்கு .........................................

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர்போட்டி எண் - 09
## லேவியர் அதிகாரம் 1 - 13 விடைகள்

01. உசியேல் (10:04)
02. படைக்கப்பட்ட நாளில் (07:15)
03. இளம் காளையை (04:13)
04. நாதாபு, அபிகூ (10:01)
05. பழுதற்ற ஒரு காளையை (01:03)
06. பாவம் போக்கும் பலிப்பொருளான ஆட்டுக்கிடாயை (10:16)
07. சந்திப்புக் கூடார (08:03)
08. புளிப்பேறியதாய் (20:11)
09. பழுதற்ற கிடாயாகவோ, ஆடாகவோ (03:06)
10. இரு காட்டுப் புறாக்கள், இரு புறாக் குஞ்சுகள் (05:07)
11. எரிபலி அடிக்கப்படும் இடத்தில் (07:02)
12. எட்டாம் நாளன்று (12:03)
13. புளிக்காரம், தேன் (02:11)
14. ஏழு நாட்கள் (08:33)
15. ஓர் இளங்காளையை (04:14)

பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும். பங்குபற்றியவர்கள் - 19 பேர்
சரியான விடையளித்தோர் - 06 பேர்

**குறிப்பு: இரண்டு போட்டிக்குரிய** பரிசுக்குரியவர்களின் பரிசுத் தொகையை அவர்களது பங்குத் தந்தையிடம் பெற்றுக் கொள்ளலாம்.

அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி
31. 12. 2014

**பரிசுக்குரியவர்:–**

**1ம் பரிசு 500/=**
செல்வன் றொ.கெ. கிறேசியன்
இல: 15/12, சினேக்லேன் திருகோணமலை.

**2ம் பரிசு 300/=**
செல்வன் சனோச அன்ரனி
இல: 10/04, கண்ணகிபுரம் உவர்மலை, திருகோணமலை

**3ம் பரிசு 150/=**
செல்வி அ. கரோலின் கீர்த்திகா
இல: 57 தபால்நிலைய வீதி திருகோணமலை

**பாராட்டுக்குரியவர்கள் :**
- செல்வன் ஆர். எமில்ராஜ் நித்தியபுரி
- செல்வன் டிலுசன் குணசேகரன் பாலையூற்று
- செல்வன் ஏ. சுலக்ஷன் பாலையூற்று

# மறைக்கல்வி கற்போம் ~ 04

01. கிறிஸ்துவின் பிறப்பு மீட்பின் மறைபொருள் எனக் கூறியவர் யார்?
**தூய பெரிய சிங்கராயர் ( திருத்தந்தை)**
02. முதல் முதலில் கிறிஸ்மஸ் விழாவை எந்த நாட்டினர் கொண்டாடினர்?
**உரோமையினர்**
03. கிறிஸ்மஸ் விழா எத்தனையாம் ஆண்டில் ஆரம்பமானது?
**கி.பி 354ல் மார்கழி 25ம் திகதி**
04. விண்மீனை இறையியல் வல்லுனர்கள் எதற்கு ஒப்பிடுகின்றனர்?
**இறைவெளிப்பாட்டிற்கு**
05. சன்டாவின் (கிறிஸ்மஸ் தாத்தாவின்) உண்மைப் பெயர்?
**தூய நிக்கலஸ்**
06. விண்மீனை சிமியோன் எதற்கு ஒப்பிட்டுக் காட்டுகின்றார்?
**தெய்வீக குழந்தை புறவினத்தாருக்கு ஒளியாக இருக்கும் என்பதற்கு**
07. மூன்று ஞானிகள் கொடுத்த காணிக்கையின் பண்புகள்?
**1. பொன் - கிறிஸ்துவை அரசராகவும் அரசருக்கு அளிக்கப்படும் காணிக்கை**
**2. தூபம் - குருவாகவும் (குருவின் செயலை குறிப்பதாகும்)**
**3. வெள்ளைப் போளம் - கிறிஸ்து மனிதருக்காக பலியாகப்போவதையும் மீட்பராவதையும்.**
08. கிறிஸ்துவின் பிறப்பு செய்தி முதலில் யாருக்கு அறிவிக்கப்பட்டது?
**இடையர்களுக்கு**
09. தூய கன்னி மரியாளின் அமல உற்பவப் பெருவிழா எப்போது?
மார்கழி 08
10. கிறிஸ்மஸ் மரம் என்பதன் பொருள் என்ன?
பசுமை மாறாத மரம்
11. அமல உற்பவ துறவற விழா மார்கழி எத்தனையாம் திகதி?
08ம் திகதி
12. திருக்குடும்ப பெருவிழா எப்போது?
**கிறிஸ்து பிறப்பின் பின்வரும் ஞாயிறு**
13. மாசில்லா குழந்தைகளின் நாள் எப்போது?
மார்கழி 28ம் திகதி
14. உலகில் முதன் முதலாக கிறிஸ்மஸ் குடில் அமைத்தவர் யார்?
**தூய பிரான்சிஸ் அசீசியார்**
15. இவர் எத்தனையாம் ஆண்டுக்கு முன் தொடங்கி வைத்தார்?
**700 ஆண்டுகளுக்கு முன் 1223ம் ஆண்டு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூய வனத்து அந்தோனியார் ஆலய தூய வின்சன் டி பவுல் சபையினரின் நினைவுநாள் சிறப்பு கொண்டாட்டம்




கடந்த 26.10.2014 அன்று தூய வனத்து அந்தோனியார் ஆலய வின்சன் டி போல் சபையினரால் ஞாயிறு திருப்பலி சிறப்பிக்கப்பட்டு உதவி பெறுவோருக்கான உலர் உணவுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன. இதனை பங்குத்தந்தை S.S ஜோன்பிள்ளை அவர்களும் சபை உறுப்பினர்களும் வழங்கி வைத்தனர்.

## இறந்தோரை நினைவு கூரும் கார்த்திகை 2



## பீடப்பணியாளர் தினம் (தூய மரியாள் பேராலயம்)



## எகெட் கரித்தாஸ் நிறுவனம் மண்சரிவினால் அகால மரணமடைந்தவர்களுக்காகவும், இறந்தோருக்குமான சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

கார்த்திகை மாதம் 7ம் திகதி (2014.11.07) கொஸ்லத்த மீரிய பெத்த என்னும் இடத்தில் ஏற்பட்ட பயங்கர மண்சரிவினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த எமது மக்களுக்கு அஞ்சலி செலுத்து முகமாக திருமலை எகெட் கரித்தாஸ் நிறுவன பணிப்பாளர், ஊழியர்கள் அனைவரும் தங்களது அனுதாபத்தை மனதாரத் தெரிவிக்கு முகமாக அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு அருட்பணி நிதிதாசன் அடிகளார் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. சகலரும் எரியும் மெழுகுவர்த்தியுடன் பவனியாக வந்து பீடத்தடியில் வைத்து தங்களது அஞ்சலியைச் செலுத்தினார்கள்.



## தூய வின்சன் டி பவுல் திருவிழா



## கத்தோலிக்க இளைஞர் தினம் (தூய மரியாள் பேராலயம்)



## பிறந்த நாள் கொண்டாட்டம்




## பாலையூற்று முன்பள்ளி பட்டமளிப்பு



## அருளாளர் யோசப்வாஸ் மூப்பர் அமைப்பு



## இலிங்கநகர் தூய யூதாததேயு ஆலயத் திருவிழா 2014





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறைவனுக்கு இடையறாது நன்றிப் பூக்கள் தூவுவோம்**